**பாடம் 4**

# விசுவாசத்தினால் நீதிமானாக்கப்படுதல்



**மனன வசனம்**

**ஆதலால், மனுஷன் நியாயப்பிரமாணத்தின் கிரியைகளில்லாமல் விசுவாசத்தினாலேயே நீதிமான் ஆக்கப்படுகிறான் என்று தீர்க்கிறோம். ரோமர் 3:28.**

**ஆராய்ச்சிக்கு**

**ரோமர் 3:19-28.**

அக்டோபர் 21 பிற்பகலில், இந்த வேதப்பகுதிகளை வாசித்து, மனனவசனத்தை மனனம்செய்க.

'விசுவாசத்தினால் நீதிமானாக்கப்படுகிறோம்' என்பதே ரோமர் நிருபத்தின் அடிப்படைக் கருத்து. புரொட்டடஸ்டன்ட் சீர்திருத்தம் வெளிப்படுத்தின மிக முக்கியமான சத்தியம் இது. 1520 இல் இந்த நம்பிக்கை குறித்து ரோம் வைத்திருந்த அதே நம்பிக்கையில்தான் ரோம் இன்றும் இருக்கிறது. 1520இல் மார்டின் லூதரையும் அவர் போதனைகளையும் கண்டித்து போப் லியோ ஒரு அறிக்கை வெளியிட்டார். அந்த அறிக்கையின் ஒரு பிரதியை லூதர் தீயிட்டுக்கொளுத்தினார். ஏனெனில், விசுவாசத்தினால்மட்டுமே இரட்சிப்பு என்கிற சத்தியத்தில் அவர் எந்த சமரசமும் செய்யவில்லை.

இந்த உண்மையும்கூட நியாயப்பிரமாணத்தை அடிப்படையாகக் கொண்டதுதான். நியாயப்பிரமாணத்தை மீறுகிற ஒருவர், நீதிபதிமுன் கொண்டுவரப்பட்டு தன் மீறுதல்களுக்காக மரணதண்டனை அடைகிறார். ஆனால், ஒரு பதிலாளி வந்து, மீறுதல்செய்தவரின் குற்றங்களை அந்தப் பதிலாளி ஏற்றுக்கொண்டு, அந்தக் குற்றவாளியை விடுவிக்கிறார். அந்தப் பதிலாளியை ஏற்றுக்கொள்வதால், குற்றவாளி தன் குற்றங்கள் நீங்கியவராக நீதிபதிமுன் நிற்கமுடிகிறது; அதோடு தன்மேல் சுமத்தப்பட்ட குற்றங்களை இந்தக் குற்றவாளி செய்யாதவர் போலவே கருதப்படுகிறார். குற்றமேசெய்யாத பதிலாளி, தாம் முற்றிலும் சட்டத்திற்குக் கீழ்ப்படிந்து, தன் புண்ணியத்தை இந்தக் குற்றவாளிக்கு வழங்குகிறார்.

இரட்சிப்பின் திட்டத்தில் நாம் ஒவ்வொருவரும் குற்றவாளிகள். நம் பதிலாளியான இயேசு ஒரு குற்றமும் செய்யாதவர்; அவர் நமக்காக நீதிமன்றத்தில் நிற்கிறார்; நம் நீதிக்குப்பதிலாக அவருடைய நீதி ஏற்றுக்கொள்ளப்படுகிறது. நம் கிரியைகளால் அல்ல, இயேசுவின் நீதியை 'விசுவாசத்தோடு' ஏற்றுக்கொள்வதால் தேவனுக்கு முன் நீதிமான்களாக எண்ணப்படுகிறோம். இதைவிட ஒரு பெரிய நற்செய்தி ஏதாவது இருக்கமுடியுமா?

## நியாயப்பிரமாணத்தின் கிரியைகள்

***ரோமர் 3:19,20இல் நியாயப்பிரமாணம்பற்றி பவுல் சொல்வது என்ன? நியாயப்பிரமாணத்தால் என்ன செய்யமுடியும், என்ன செய்யமுடியாது? கிறிஸ்தவர்கள் அனைவரும் இந்தக் கருத்தைப் புரிந்துகொள்வது ஏன் முக்கியமானதாகும்?***

---

---

---

தன் காலத்து யூதர்கள் புரிந்துகொள்ளும் விதத்தில், பலவிஷயங்களை கருத்தில்கொண்டு நியாயப்பிரமாணம்பற்றி பவுல் இங்கு பேசுகிறார். நியாயப்பிரமாணம் என்பதற்கான எபிரெய வார்த்தை '**டோரா**'; மோசேயின் ஐந்து புத்தகங்களிலும், ஏன் பழைய ஏற்பாடு முழுவதிலுமே தேவன் கொடுத்துள்ள கட்டளைகளை இது சுட்டிக்காட்டுகிறதென இன்றைய யூதருக்குக்கூட தெரியும். இதன் ஒரு பகுதியாக ஒழுக்கப்பிரமாணமும், இதை எடுத்துக்காட்டுகின்ற கற்பனைகள்-நியாயங்கள்- சடங்காச்சார நியமங்கள் போன்றவையும் உள்ளன. எனவே, நியாயப்பிரமாணம் என்பது இங்கு யூதமார்க்க முறைமையைச் சுட்டிக்காட்டுகிறது எனலாம்.

நியாயப்பிரமாணத்திற்குக் கீழ்ப்பட்டிருப்பது என்றால், அதன் அதிகாரத்திற்குக் கீழ்ப்பட்டிருப்பதாகும். நியாயப்பிரமாணம் ஒருவருடைய குறைகளையும் குற்றங்களையும் தேவனுக்கு முன்பாக வெளிப்படுத்துகிறது. நியாயப்பிரமாணத்தால் குற்றத்தை நீக்கமுடியாது; அந்தக் குற்றத்திலிருந்து நீக்குகிற நபரைநோக்கி நியாயப்பிரமாணம் பாவியை ஓடச்செய்கிறது.

இன்று யூதப்பிரமாணம் செயலில் இல்லை; எனவே ரோமர் சொல்கிற நியாயப்பிரமாணத்தை ஒழுக்கப்பிரமாணம் என்று எடுத்துக்கொள்கிறோம். யூதப்பிரமாணத்தால் யூதர்களை இரட்சிக்க முடியாததுபோல இந்த ஒழுக்கப்பிரமாணத்தாலும் நம்மை இரட்சிக்கமுடியாது. பாவியை இரட்சிப்பது ஒழுக்கப்பிரமாணத்தின் வேலை அல்ல. தேவனுடைய குணத்தையும், அந்தக் குணத்தைப் பிரதிபலிப்பதில் மக்கள் எங்கு தவறுகிறார்கள் என்பதையும் வெளிப்படுத்துவதே இதன் வேலை.

ஒழுக்கப்பிரமாணம், சடங்காச்சாரப்பிரமாணம், சமூகப்பிரமாணம் என ஏதாவது ஒன்றையோ அனைத்தையுமோ கைக்கொள்வதால் தேவனுடைய பார்வையில் ஒருவர் நீதிமானாகிவிட முடியாது. நியாயப்பிரமாணத்தின் நோக்கம் இதுவல்ல. மாறாக, நம்முடைய குறைகளைச் சுட்டிக்காட்டி, நம்மை கிறிஸ்துவிடம் அழைத்துச் செல்வதே நியாயப்பிரமாணத்தின் நோக்கம்.

நோயின் அறிகுறியால் அந்த நோயைக் குணமாக்கமுடியுமா? அதுபோலவே நியாயப்பிரமாணத்தால் நம்மைக் குணமாக்கமுடியாது. அறிகுறிகள் குணமாக்குவதில்லை; மாறாக குணமாகவேண்டும் என்பதை அவை சுட்டிக்காட்டுகின்றன.

நியாயப்பிரமாணத்தை எவ்வளவு வெற்றிகரமாகக் கடைப்பிடிக்கிறீர்கள்? நியாயப்பிரமாணத்தைக் கைக்கொண்டு இரட்சிப்பைப் பெற முயல்வது, எவ்வளவு வீணானது என்பதுபற்றி உங்கள் பதில் சொல்வது என்ன?

## தேவனுடைய நீதி

**திங்கள்**
**அக்டோபர் 23**

*'இப்படியிருக்க, நியாயப்பிரமாணமில்லாமல் தேவநீதி வெளியாக்கப்பட்டிருக்கிறது; அதைக் குறித்து நியாயப்பிரமாணமும் தீர்க்கதரிசனங்களும் சாட்சியிடுகிறது.' ரோமர் 3:21.*

***இந்த வசனத்தின் அர்த்தம் என்ன?***

---

---

நியாயப்பிரமாண நீதியோடு ஒரு புதிய நீதி இங்கு ஒப்பிடடப்படுகிறது; நியாயப்பிரமாணத்தின் நீதிபற்றிதான் யூதர்கள் நன்கு அறிந்திருந்தார்கள். இந்தப் புதிய நீதி 'தேவநீதி' என்று அழைக்கப்படுகிறது; இது தேவனிடமிருந்து வருகிற நீதி, தேவன் வழங்குகிற நீதி, அவர் ஏற்றுக்கொள்ளுகிற நீதி.

இயேசு இந்தப் பூமியில் மனிதனாக வாழ்ந்தபோது, இந்த நீதியைத்தான் தம் வாழ்க்கையில் வெளிப்படுத்தினார்; இதை விசுவாசத்தோடு ஏற்றுக்கொண்டு, தங்களுக்குச் சொந்தங்கொண்டாடும் யாவருக்கும் தேவன் இதை இலவசமாகக் கொடுக்கிறார். தங்கள் தகுதியை வைத்து அல்ல, தங்கள் தேவையை உணர்ந்து கேட்டால்தான், இதைப் பெற்றுக்கொள்ள முடியும்.

'நியாயப்பிரமாணத்திற்குக் கீழ்ப்படிவதே நீதியாகும். நியாயப்பிரமாணம் நீதியைக் கோருகிறது; எனவே பாவி, நியாயப்பிரமாணத்தின்படி செய்தாகவேண்டும்; ஆனால் அதைச் செய்கிற திராணி அவனிடம் இல்லை. விசுவாசத்தினால் மட்டுமே அவன் நீதியைப் பெறமுடியும். விசுவாசத்தோடு கிறிஸ்துவின் புண்ணியங்கள்மூலம் அவன் தேவனுக்குமுன் வருகிறான்; ஆண்டவர் தம் குமாரனின் புண்ணியங்களை பாவியின் கணக்கில் எண்ணுகிறார். மனிதனின் தோல்விக்குப் பதிலாக கிறிஸ்துவின் நீதி ஏற்றுக்கொள்ளப்படுகிறது; மனந்திருந்தி விசுவாசிக்கிற ஆத்துமாவை அவர் ஏற்றுக்கொண்டு, மன்னித்து, நீதிமானாக்குகிறார்; அவன் நீதிமானாக வாழ்ந்ததுபோல நடத்துகிறார்; தம் குமாரனை நேசிப்பதுபோல அவனை நேசிக்கிறார்.' - *EGW, 1SM, p 367.*

***இந்த அற்புத உண்மையை நீங்கள் மனதார ஏற்றுக்கொள்வதற்கு என்ன செய்யலாம்?***

---

---

இயேசு கிறிஸ்துவைப் பற்றும் விசுவாசம் என்றால், அவர் மேல்வைக்கும் விசுவாசம் ஆகும். கிறிஸ்தவ வாழ்வில் இந்த விசுவாசம் காணப்பட்டால் இது வெறும் அறிவுப்பூர்வமான ஒரு விசுவாசமாகமட்டும் இருக்காது; கிறிஸ்துவின் வாழ்க்கை, மரணம்குறித்து சில உண்மைகளை மட்டும் ஏற்றுக்கொள்கிற விசுவாசமாக இருக்காது. மாறாக, இயேசு கிறிஸ்துமேல் மெய்யான விசுவாசம் என்பது அவரை இரட்சகராகவும் பதிலாளியாகவும் பிணையாகவும் ஆண்டவராகவும் ஏற்றுக்கொள்வதாகும்; அவர் வாழ்ந்தபடி வாழத் தீர்மானிப்பதாகும். அவரை நம்பி, அவருடைய கற்பனைகளின்படி வாழ்வதற்கு விசுவாசத்தோடு முயல்வதாகும்.

## அவருடைய கிருபையினாலே

***நியாயப்பிரமாணத்தையும் அதால் செய்யமுடியாததையும்பற்றி நாம் படித்ததை மனதில் வைத்து, ரோமர் 3:24ஐ வாசியுங்கள். பவுல் சொல்வது என்ன? இயேசுவிலுள்ள மீட்பு என்றால் என்ன?***

---

**டிகையூ** என்கிற கிரேக்க வார்த்தையானது இங்கு 'நீதிமானாக்கப்படுதல்' என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது; இதற்கு 'நீதிமானாக அறிவித்தல்' அல்லது 'நீதிமானாக எண்ணுதல்' என்றும் அர்த்தமாகும். நீதி என்பதற்கான **டிகையோ ஸுன்** என்கிற மூலவார்த்தையில் இருந்தும், 'நீதி தேவை' என்பதற்கான **டிகையோமா** என்கிற மூல வார்த்தையில் இருந்தும் இந்த வார்த்தை வந்துள்ளது. எனவே, 'நீதிமானாக்கப்படுதலுக்கும்' 'நீதிக்கும்' ஒரு நெருங்கிய தொடர்பு இருக்கிறது. தேவன் நம்மை 'நீதியுள்ளவர்களாக அறிவித்ததும்' நாம் நீதிமான்களாக்கப்படுகிறோம்.

இவ்வாறு நீதிமானாக்கப்படுவதற்கு முன்னர் ஒருவர் அநீதியுள்ளவராக, தேவனால் ஏற்றுக்கொள்ளப்படாதவராக இருக்கிறார்; நீதிமானாக்கப்பட்ட பிறகு நீதியுள்ளவராக எண்ணப்பட்டு, தேவனால் ஏற்றுக்கொள்ளப்படுகிறார்.

தேவ கிருபையால்மட்டுமே இது சாத்தியமாகிறது. கிருபை என்பது ஒரு சலுகை. இரட்சிக்கப்படும்படி ஒரு பாவி தேவனிடம் திரும்பும்போது அவரை நீதிமானாக எண்ணுவதோ அறிவிப்பதோ தேவனுடைய சுத்த கிருபை. இது தகுதி இல்லாதவர்களுக்குக் காட்டப்படுவது. தன்னில் எந்தப் புண்ணியமும் இல்லாத நிலையில், தன் அதோகதியைத் தவிர தன் சார்பாக தேவனுக்குமுன் எந்தக் கோரிக்கையும் வைக்கமுடியாத நிலையில் விசுவாசி நீதிமானாக்கப்படுகிறார். இயேசு கிறிஸ்துவிலுள்ள மீட்பினால் அவர் நீதிமானாக்கப்படுகிறார்; பாவியின் பதிலாளியாகவும் பிணையமாகவும் இயேசு அருளுகிற மீட்புதான் அது.

நீதிமானாக்கப்படுதல் என்பது ஒரு குறிப்பிட்ட நேரத்தில் நிகழ்கிற ஒன்றாகதான் ரோமர் புத்தகத்தில் சொல்லப்பட்டுள்ளது. பாவியானவன் நீதியில்லாதவனாக, ஏற்றுக்கொள்ளப்படாதவனாக வெளியே இருக்கிறான்; அவன் நீதிமானாக்கப்பட்டதுமே உள்ளே சேர்க்கப்பட்டு, நீதிமானாக எண்ணப்படுகிறான்.

கிறிஸ்துவுக்குள் இருக்கிற ஒருவர் நீதிமானாக்கப்படுதலை ஒரு கடந்தகால நிகழ்வாகவே பார்க்கிறார்; அதாவது அவர் தன்னை கிறிஸ்துவிடம் முற்றிலும் அர்ப்பணித்த அன்றே அவர் நீதிமானாக்கப்பட்டுவிடுகிறார். நாம் 'நீதிமான்களாக்கப்பட்டிருக்கிறோம்' என்றுதான் ரோமர் 5:1இல் சொல்லப்படுகிறது.

நீதிமானாக்கப்பட்ட பாவி மறுபடியும் விழுந்து, மறுபடியும் கிறிஸ்துவிடம் திரும்பினால், நீதிமானாக்கப்படுகிற வேலை மீண்டும் நடக்கிறது. மேலும், மனமாற்றமானது ஓர் அனுதின அனுபவமாக இருக்குமானால், நீதிமானாக்கப்படுதலும் மீண்டும்மீண்டும் நிகழ்கிற ஒன்றாக இருக்கிறது.

---

இரட்சிப்பானது மிகப்பெரிய நற்செய்தியாக இருக்குமானால், அதை ஏற்றுக்கொள்ளாதபடிக்கு மக்களைத் தடுப்பது எது? ஆண்டவர் உங்களுக்கு இலவசமாக வாக்களித்திருக்கும், அனைத்தையும் நீங்கள் பெற்றுக்கொள்ளாதபடிக்கு என்னென்ன விஷயங்கள் உங்களைத் தடுத்துக்கொண்டிருக்கின்றன?

இரட்சிப்பின் நற்செய்திபற்றி ரோமர் 3:25,26இல் பவுல் விவரிக்கிறார். கிருபாதாரபலி என்கிற ஒரு புனைவுச்சொல்லைப் பயன்படுத்துகிறார். இதற்கான கிரேக்க வார்த்தை **ஹிலஸ்டிரியான்**; புதிய ஏற்பாட்டில் இங்கும் எபிரெயர் 9:5 இலும்தான் இந்த வார்த்தை பயன்பட்டுள்ளது. அங்கு 'கிருபாசனம்' என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. ரோமர் 3:25இல் கிருபாதாரபலி என்கிற வார்த்தை, மனிதர்கள் நீதிமானாக்கப்படுவதையும் கிறிஸ்துவின்மூலம் கிடைக்கிற மீட்பையும் சுட்டிக்காட்டுவதால், பழைய ஏற்பாட்டு ஆசரிப்புக் கூடார கிருபாசனமானது நிழலாகக்காட்டிய எல்லாவற்றின் நிறைவேறுதலையும் இது சுட்டிக்காட்டுகிறது. எனவே, இயேசு தம் சிலுவை மரணத்தினால் இரட்சிப்பிற்கான வழிவகைகளை உண்டுபண்ணினார்; கிருபாதார பலியைச் செலுத்தினார். அதாவது, நம்மை இரட்சிப்பதற்கு தேவையான அனைத்தையும் தேவன் செய்துவிட்டார்.

'பாவத்தைப் பொறுத்துக்கொள்ளுதல்'பற்றியும் இந்த வசனம் கூறுகிறது. நம் பாவம்தான் தேவன் நம்மை ஏற்றுக்கொள்ளாதபடி செய்கின்றது. நம் பாவங்களைப் போக்குவதற்கு நாம் ஒன்றுமே செய்யமுடியாது. ஆனால், கிறிஸ்துவின் இரத்தத்தின்மேல் விசுவாசம் வைப்பதின்மூலம் நம் பாவங்கள் மன்னிக்கப்படுவதற்கான ஒரு வழியை தேவன் ஏற்படுத்தியிருக்கிறார்.

'பொறுத்துக்கொள்ளுதல்' என்பதற்கான கிரேக்க வார்த்தை **பரெஸிஸ்**. இதற்கு 'கடந்துசெல்லுதல்' அல்லது 'விட்டுவிடுதல்' என்று அர்த்தம். 'விட்டுவிடுதல்' என்றால் பாவங்களைக் கண்டுகொள்ளாமல் விடுவதல்ல. கிறிஸ்து தம் மரணத்தினால் சகல மனிதர்களின் பாவங்களுக்குமான தண்டனையை அனுபவித்துவிட்டதால் கடந்தகால பாவங்களை அவர் காணாதவராக இருக்கிறார். எனவே, 'இயேசுவினுடைய இரத்தத்தைப்பற்றும் விசுவாசம்' உடைய எவருடைய பாவங்களையும் அவர் பொறுத்துக்கொள்கிறார்; ஏனெனனில், ஏற்கனவே அந்த நபருக்காக கிறிஸ்து மரித்திருக்கிறார்.

***ரோமர் 3:26,27இல் பவுல் வலியுறுத்தும் கருத்து என்ன?***

தேவனுடைய 'நீதியானது' ஒவ்வொரு மனிதனுக்கும் அருகிலுள்ளது. நம் கிரியைகளாலோ, புண்ணியத்தாலோ அல்ல; இயேசுவின் மீதான விசுவாசத்தாலும், அவர் நமக்காகச் செய்திருப்பதாலுமே அது நமக்குக் கிடைத்திருக்கிறது. சிலுவையால் பாவிகளை நீதிமான்கள் எனத் தீர்த்து, சர்வலோகத்திற்கும்முன் அவர் செயலை நியாயப்படுத்தமுடிகிறது. சிறந்ததொரு பலியை பரலோகம் செலுத்தியிருப்பதால் தேவனை சாத்தான் குற்றப்படுத்தமுடியாது. தேவன் தாம் எதையும் செய்ய விரும்பாமல், மனிதர்களிடமிருந்து அதிகம் எதிர்பார்த்தார் என்பதே சாத்தானுடைய குற்றச்சாட்டு; இது பொய்யெனச் சிலுவை நிரூபித்துள்ளது.

உலகத்தார் பாவம்செய்ததும் தேவன் உலகத்தை அழிப்பாரென சாத்தான் எதிர்பார்த்தான்; மாறாக, உலகத்தை இரட்சிக்க இயேசுவை தேவன் அனுப்பினார். தேவனுடைய குணம்பற்றி இது என்ன சொல்கிறது? தேவனுடைய குணம்பற்றி நாம் அறிந்திருந்தால் நம் வாழ்க்கை எப்படிப்பட்டதாக இருக்கும்? தேவன் எப்படிப்பட்டவரென அறிந்துள்ளதால், அடுத்த 24 மணி நேரத்திற்கு நீங்கள் எத்தகைய வாழ்க்கையை வாழப்போகிறீர்கள்?

## நியாயப்பிரமாணத்தின் கிரியைகளில்லாமல்

***‘ஆதலால், மனுஷன் நியாயப்பிரமாணத்தின் கிரியைகளில்லாமல் விசுவாசத்தினாலேயே நீதி மானாக்கப்படுகிறான் என்று தீர்க்கிறோம்.’ ரோமர் 3:28. நியாயப்பிரமாணம் நம்மை இரட்சிக்காததால் அதற்கு நாம் கீழ்ப்படியவேண்டாம் என்று அர்த்தமா? விளக்கம் சொல்லுங்கள்.***

வரலாற்றுப் பின்னணியில் பார்த்தால், யூதமார்க்க முறைமையை கருத்தில் கொண்டு ரோமர் 3:28இல் பவுல் அவ்வாறு கூறுகிறார். இந்த முறைமையின்படி வாழ்வதற்கு ஒரு யூதன் எவ்வளவுதான் நேர்மையாக முயன்றாலும், அவர் இயேசுவை மேசியாவாக ஏற்றுக்கொள்ளாவிட்டால் நீதிமானாக்கப்படமுடியாது.

விசுவாசப்பிரமாணத்தில் பெருமைபாராட்டலுக்கு இடமில்லை என்று பவுல் ரோமர் 3:28இல் பவுல் சொல்லவருகிறார். தன்னுடைய கிரியைகளால் ஒருவன் நீதிமானாக முடிந்தால், அதுகுறித்து அவன் பெருமைபாராட்ட முடியும். இயேசுவை விசுவாசிப்பதால் அவன் நீதிமானாகிறான் என்றால், அந்தப் புண்ணியமானது பாவியை நீதிமானாக்குகிற தேவனையே சாரும்.

‘விசுவாசத்தினால் நீதிமானாக்கப்படுதல் என்றால் என்ன?’ என்கிற கேள்விக்கு எலன் ஒய்ட் அருமையான ஒரு பதிலைச் சொல்கிறார்: ‘மனிதனுடைய மகிமையைக் குப்பையில் போட்டு, அவன் தன் திறமையால் தனக்குச் செய்யமுடியாததை தேவன் அவனுக்காகச் செய்கிற கிரியை.’ - *EGW, TM, p 456.*

நியாயப்பிரமாணத்தின் கிரியைகளால் கடந்தகால பாவங்களை நிவிர்த்தி செய்யமுடியாது. நீதிமானாக்கப்படுதல் என்பது சம்பாதிக்கிற ஒன்று அல்ல. கிறிஸ்துவின் பாவநிவாரண பலியை விசுவாசிப்பதால் பெறக்கூடிய ஒன்று. எனவே, நியாயப்பிரமாணத்தின் கிரியைகளுக்கும் நீதிமானாக்கப்படுதலுக்கும் சம்பந்தமே இல்லை. நம்மில் எந்தப் புண்ணியமும் இல்லாத நிலையில் நாம் நீதிமானாக்கப்படுவதே கிரியைகளில்லாமல் நீதிமானாக்கப்படுவது ஆகும்.

ஆனால் கிறிஸ்தவர்கள் பலர் இந்த வசனத்தை தவறாகப் புரிந்துகொண்டு, செயல்படுகிறார்கள். நம்பிக்கை இருந்தால் போதும், கிரியைகளோ கீழ்ப்படிதலோ, ஏன் ஒழுக்கப்பிரமாணத்திற்குக் கீழ்ப்படிவதுகூட தேவையில்லை என்கிறார்கள். இது பவுல் சொல்வதற்கு முற்றிலும் மாறானது. ஒழுக்கப்பிரமாணத்தைக் கைக்கொள்வதை ரோமரிலும் பிற நிருபங்களிலும் பவுல் மிகவும் முக்கியப்படுத்துகிறார். யாக்கோபு மற்றும் யோவான் போலவே இயேசுவும் இதை முக்கியப்படுத்தினார். மத் 19:17; ரோமர் 2:13; யாக் 2:10,11; வெளி 14:12. நியாயப்பிரமாணத்திற்குக் கீழ்ப்படிவது யாரையும் நீதிமானாக்கமுடியாது என்றாலும், விசுவாசத்தால் நீதிமானாக்கப்பட்டவர் தேவனுடைய நியாயப்பிரமாணத்தின்படி நடப்பார்; அவரால் மட்டுமே நியாயப்பிரமாணத்திற்குக் கீழ்ப்படியமுடியும். புதுசிருஷ்டியாக மாறி, நீதிமானாக்கப்படமுடியாத ஒருவரால் நியாயப்பிரமாணத்தின் கோரிக்கைகளை நிறைவேற்றவே முடியாது.

நியாயப்பிரமாணம் நம்மை இரட்சிக்காததால் அதைக் கைக்கொள்வது அவசியமல்ல என்று நினைப்பது ஏன் எளிது? விசுவாசத்தால்தான் இரட்சிப்பு என்று பாவத்தை நியாயப்படுத்தி இருக்கிறீர்களா? அது ஏன் மிகவும் ஆபத்தானது? அப்படியே நாம் தவறுசெய்துவிட்டாலும், இரட்சிப்பின் வாக்குறுதிமட்டும் இல்லாவிட்டால் நம் நிலை என்னவாகும்?

"நியாயப்பிரமாணமானது பாவத்திற்கான தண்டனையைச் சுமக்கமுடியாமல், பாவியின் குற்றங்களை எல்லாம் அவன்மேல் சுமத்துகிறது; ஆனால், மனந்திரும்பி, தம் இரக்கத்தில் நம்பிக்கைவைக்கும் அனைவருக்கும் கிறிஸ்து பூரணமாக மன்னிப்பை வழங்குகிறார். மனந்திருந்தி, நம்புகிற ஆத்துமாவுக்கு தேவ அன்பு பரிபூரணமாக வழங்கப்படுகிறது. ஆத்துமா மீதான பாவ முத்திரை, பிதாவுக்குச் சமமான இயேசுவின் பாவ நிவாரண பலியின் இரத்தத்தால்மட்டுமே துடைத்தழிக்கப்படமுடியும். கிறிஸ்துவின் வாழ்க்கையும், நிந்தையும், மரணமும், பாவிக்காக அவர் பரிந்துபேசுதலும் நியாயப்பிரமாணத்தை விவரித்து, அதை மேன்மையுள்ளதாக்குகிறது." *1SM, EGW, p 371.*

"கிறிஸ்துவின் குணம் உங்களுடைய குணமாக எண்ணப்படும். நீங்கள் பாவம் செய்யாதவர்போல தேவனுக்கு முன்பாக ஏற்றுக்கொள்ளப்படுவீர்கள்." – *EGW, SC, p 62.*

"'நியாயப்பிரமாணத்தின் கிரியைகளில்லாமல்' நாம் இரட்சிக்கப்படுகிறோம் என்று விசுவாசம் மற்றும் கிருபையின் கிரியைகளை முக்கியப்படுத்துவதற்காக அப்போஸ்தலர் சொல்லவில்லை; ஏனென்றால், இந்தக் கிரியைகளைச் செய்கிறவர் இவற்றைச் செய்வதால், தான் நீதிமானாக்கப்படுவதாக நம்புவதில்லை. (விசுவாசக் கிரியைகளைச் செய்து) தான் (விசுவாசத்தால்) நீதிமானாக்கப்பட முயல்கிறார். சுயநீதிக்காரர் நம்புகிற கிரியைகளைத்தாம் அப்போஸ்தலர் 'நியாயப்பிரமாணத்தின் கிரியைகள்' என்று குறிப்பிடுகிறார்; அந்தக் கிரியைகளால் தாங்கள் நீதிமான்களாக்கப்பட்டதாகவும், தங்கள் கிரியைகள் தங்களை நீதிமான்களாக்கியதாகவும் நினைக்கிறார்கள். அதாவது, நன்மைசெய்து நீதியை அவர்கள் நாடுவதில்லை; மாறாக, தங்கள் கிரியைகளால் தாங்கள் ஏற்கனவே நீதியை அடைந்துவிட்டதாக பெருமைபாராட்டுகிறார்கள்." – *Martin Luther, Commentary on Romans, p. 80.*

## கலந்துரையாடக் கேள்விகள்

1. இந்த வார வசனங்களை வாசித்து, சாராம்சத்தை சுருக்கமாக எழுதுங்கள்.
2. மேலே லூதர் சொல்கிற சத்தியமானது, அவரை அந்த அளவுக்கு எவ்வாறு புரட்சிசெய்யத் தூண்டியிருக்கமுடியும்? இந்தச் சத்தியத்தை இன்றும் நாம் புரிந்திருப்பது ஏன் முக்கியமானது?
3. 'விசுவாசத்தினால்மட்டுமே கிருபையால் நீதிமான்களாக்கப்படுகிறோம் என்கிற வேதாகமப் போதனையாகிய சீர்திருத்தக்கருத்துகளின் சுதந்தரவாளிகள் என்றும், அதன்மேல் கட்டுகிறவர்கள் என்றும், அப்போஸ்தல சுவிசேஷத்தின் சமநிலையையும், தெளிவையும், பூரணத்தையும் மீண்டும் நிலைநிறுத்தி அறிவிக்கிறவர்கள் என்றும் செவந்த்-டே அட்வென்டிஸ்டுகள் தங்களைக் கருதுகிறார்கள்.' - இவான் டி. பிளேஷன். என்ன காரணங்களின் அடிப்படையில், நாம் இப்படிப்பட்ட நம்பிக்கை உடையவர்களாக இருக்கிறோம்?

# பாருங்கள் கேளுங்கள்

## காக்கும் கரங்கள் நிகழ்ச்சிகள்
## உங்கள் கேள்வியின் நேரம்

தேவ செய்தியாளர்கள்: போதகர் சாத்ராக் சாமுவேல்,
டாக்டர் ஏ. ஜான்சன்

தமிழன் தொலைக்காட்சியில் சனிக்கிழமை காலை 6.00 மணிக்குக் காணத்தவறாதீர்கள்

## சுபவார்த்தா

**Big TV** யில் தெலுங்கு நிகழ்ச்சிகளை காலை 7.00 மணிக்குக் காணத்தவறாதீர்கள்

## ஹோப் டிவி நிகழ்ச்சிகள்

அனுதினமும் காலை 6.00 மணிக்கும், 8.30 மணிக்கும், மாலை 6.00 மணிக்கும், இரவு 8.30 மணிக்கும் காணத்தவறாதீர்கள்

## ஆசீர்வாத நம்பிக்கை

இமயம் தொலைக்காட்சியில் சனிக்கிழமையும் ஞாயிற்றுக்கிழமையும் காலை 6.00 மணிக்கு

## அட்வென்ட்டிஸ்ட் வேர்ல்டு ரேடியோ

அனுதினமும்: பிற்பகல் 3 மணிக்கு 19 மீட்டர் பேண்ட்,
15680 கிலோ ஹெட்ஸில் கேட்கத்தவறாதீர்கள்

---

## வலைதளத்தில் (Internet இல்)

அந்தந்த வாரத்துக்குரிய ஓய்வுநாட்பள்ளிப் பாடத்தை வீடியோவாகப் பார்க்கலாம்.

**YOUTUBE** க்குப் போய்,

**Hope TV India**

என்று டைப் பண்ணி, அதில் தெரியும் சின்னத்தை அழுத்துங்கள். HopeChannel INDIA

அதின்கீழ் தமிழ்ப் பகுதியில் ஓய்வுநாட்பள்ளிப் பாடங்களைப் பார்க்கலாம்.

---

Translated by *Marshall Isaac and Ezra David*
Printed by *Oriental Watchman Publishing House, Pune.*